பிரஸார் பாரதி
<u>இந்திய வானொலி, சென்னை-4</u>

27 05 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. மக்களவைக்கு வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள ஏழாவது மற்றும் இறுதிகட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.
2. ஜம்மு-கஷ்மீரில் இதுவரை 95 கோடி ரூபாய் ரொக்கம் மற்றும் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.
3. தமிழக பல்கலைக்கழக துணைவேந்தர்களின் இரண்டு நாள் மாநாடு ஆளுநர் திரு ஆர் என் ரவி தலைமையில் இன்று தொடங்கியது
4. சர்வதேச யோகா தினம் அடுத்த மாதம் 21-ஆம் தேதி கொண்டாடப்படுவதையொட்டி ஜெனிவாவில் விழிப்புணர்வு நடை பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.
5. தமிழகத்தில் மீண்டும் வெப்பநிலை அதிகரிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் --*</u>

**[]<<<>>>[]**

மக்களவைக்கு ஏழாவது மற்றும் இறுதிகட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 57 தொகுதிகளில் பிரச்சாரம் நிறைவடைய இன்னும் மூன்று நாட்களே உள்ள நிலையில் அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

உத்தரபிரதேசம் மற்றும் பஞ்சாபில் தலா 13 தொகுதிகளிலும், பீகாரில் 8, ஒடிசாவில் 6, மேற்குவங்கத்தில் 9, ஹிமாச்சலப்பிரதேசத்தில் நான்கு, ஜார்க்கண்டில் மூன்று, மற்றும் சண்டிகரில் ஒரு தொகுதியில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

உத்தரபிரதேசம், ஜார்கண்ட், பஞ்சாப் மாநிலங்களில் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது அரசியல் தலைவர்களும், வேட்பாளர்களும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா, உத்திரபிரதேச மாநிலம் குஷிநகர், சலிம்பூர், சந்துவாரி தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா வாரணாசியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று, விவசாயிகள், நெசவாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் தனித்தனியே சந்தித்து வாக்கு சேகரிக்க திட்டமிட்டுள்ளார்,

மத்திய பிரதேச மாநில முதலமைச்சரும். பிஜேபி மூத்த தலைவருமான திரு மோகன் யாதவ், பாட்னா அருகே மனேர் என்ற இடத்தில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

ஐக்கிய ஜனதாதள் தலைவரும், பீகார் முதலமைச்சருமான திரு நிதிஷ்குமார் நாலந்தாவில் பிரச்சாரம் செய்கிறார்.

காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, ஒடிசா மாநிலம் பாலசோரில் இன்று தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் பங்கேற்கிறார்.

காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி இமாச்சல பிரதேசத்தில் உள்ள சம்பா, சாக்கூர் தொகுதிகளிலும், அக்கட்சியின் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி குர்ஷேபார், மனேர் உள்ளிட்ட இடங்களிலும் வாக்கு சேகரிக்கின்றனர்.

ராஷ்ட்ரீய ஜனதாதள் மூத்த தலைவர் திரு தேஜஸ்வி பிரசாத், பீகார் மாநிலத்தின் ஜகநாபாத், பாடலிபுரம் ஆகிய இடங்களில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரின் அனந்தநாக் - ரஜோரி தொகுதியில் ஆர்வமுடன் தங்களது வாக்குரிமையை செலுத்திய மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.,

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், ஜனநாயக உணர்வோடு மக்கள் ஆர்வமுடன் வாக்களித்து தங்கள் பிரதிநிதித்துவத்தை நிலைநாட்டி இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 35 ஆண்டுகளில் அனந்தநாக் - ரஜோரி தொகுதியில் 54 புள்ளி எட்டு நான்கு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமல்படுத்தப்பட்டதிலிருந்து 95 கோடி ரூபாய் ரொக்கம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அனந்தநாக் - ரஜோரி தொகுதியில் கடந்த சனிக்கிழமை மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நிறைவடைந்தது.

தேர்தல் பிரச்சாரத்தின்போது சி-விஜில் செயலி மூலம் 143 புகார்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், இதில்அ 80 புகார்களுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய புகார்கள் மீதும் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் தேர்தல் நடத்தும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

தமிழக பல்கலைக்கழக துணைவேந்தர்களின் இரண்டு நாள் மாநாடு இன்று உதகமண்டலத்தில் தொடங்கியது.

தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தலைமையில் நடைபெற்று வரும் இந்த மாநாட்டில் பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவர் பேராசிரியர் ஜக்தீஷ்குமார் பங்கேற்றுள்ளார்.

இதில் தொடக்க உரையாற்றிய திரு ஜக்தீஷ்குமார், பல்கலைக்கழகங்கள் திறன் மேம்பாட்டு மையங்களாக செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இளைஞர்களின் திறன் மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் அளித்து அதற்கான பயிற்சிகளுக்கு வழிவகை காண வேண்டுமென்ற அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்கள் ஆண்டுக்கு இரண்டு முறை தனித்துவம் பெற்ற பயிற்சிகளை வழங்கலாம் என்று தெரிவித்த அவர், உயர்நிலைக் கல்வியின் மூலம் புதிய இந்தியாவை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.,

உயர்ரக ஆய்வுகளை மேற்கொண்டு புதிய படைப்புகள் மற்றும் தொழில்முனைவோருக்கான பயிற்சியையும் வழங்க வேண்டும் என்றார்.,

பருவநிலை மாற்றம், பசுமை எரிவாயு போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.,

நிகழ்ச்சியில் பேசிய தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி, மத்திய மாநில அரசுகளின் உதவியுடன் இயங்கும் உயர்கல்வி நிறுவனங்கள் புதிய இந்தியாவை உருவாக்கி உலகில் சிறந்த நாடாக இந்தியா திகழ்வதற்கான ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டும் என்று கூறினார்.

கற்க கசடற கற்றவை – என்ற திருக்குறளில் கூறப்பட்டுள்ளதைப்போன்று மாணவர்களுக்கு கல்வியை வழங்குவதுடன், அந்த கல்வியின் மூலம் அவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகள் குறித்தும் விளக்கம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தனித்துவம் மிக்க மாணவர்களை உருவாக்கி வலிமையான எதிர்காலத்தை நாட்டிற்காக வடிவமைபப்து பல்கலைக்கழகங்களின் கடமையாகும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த இரண்டு நாள் மாநாட்டின் இறுதியில் அடுத்த கல்வி ஆண்டுக்கான முன்னெடுப்புகள் குறிதது பல்கலைக்கழக மானியக்குழு ஆலோசனைகளை அளிக்கும் என்றும் திரு ஆர் என் ரவி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

ரிமால் தீவிர புயல் நேற்ற இரவு கரையை கடந்ததை அடுத்து மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் கனமழை பெய்து வருகிறது.

இதுவரை 15 சென்டி மீட்டர்மழை பதிவாகியுள்ளது.

பல இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன.

பாராநகர் பகுதியில் உள்ள தொழிற்சாலையில் புகைக்கூண்டு சாலையில் பெயர்ந்து விழுந்துள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

எஸ்பிளநேட் மற்றும் பார்க் மெட்ரோ ரயில் நிலையங்களில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதால் மெட்ரோ ரயில் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ளது.

அஸ்நாபாத் – லெபுகாலி சாலையில் 40-க்கும் மேற்பட்ட மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன.

காற்றின் வேகம் தற்போது குறைந்து காணப்படுகிறது.

ரயில் பாதைகளில் தேங்கி இருந்த தண்ணீர் வடிந்ததை அடுத்து உள்ளூர் ரயில் போக்குவரத்து மீண்டும் தொடங்கியுள்ளது.

புயல் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமான சேவை இன்று மீண்டும் தொடங்கியது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் கோடை மழை குறைந்து வரும் நாட்களில் வெப்பம் அதிகரித்து காணப்படும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) -44--- செகண்ட்*

**[]<<<>>>[]**

சேலம் மாவட்டம் மேட்டூரில் உள்ள செக்கானூர் கதவணை நீர்மின் நிலையத்தில் பராமரிப்புப் பணிகள் தொடங்கியுள்ளன.

இதற்கான மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ்பைட் - விஜயகுமார் ) -45---- செகண்ட்*

**[]<<<>>>[]**

சர்வதேச யோகா தினம் அடுத்த மாதம் 21-ஆம் தேதி கொண்டாடப்படுவதையொட்டி ஐ நா-வுக்கான இந்திய நிரந்தர தூதுக்குழுவும், உலக சுகாதார அமைப்பும் இணைந்து யோகா விழிப்புணர்வு நடை பயிற்சியை ஜெனிவாவில் நேற்று நடத்தியது.

மத்திய சுகாதாரத்துறை செயலர் திரு அபூர்வ சந்திரா, உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் திரு **Tedros Adhanom** ஆகியோரும் இந்த நடை பயிற்சியில் கலந்து கொண்டு சர்வதேச யோகா தின விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

யோகா தினத்தின் ஒரு பகுதியாக பீகார் மாநிலம் புத்த கயாவில் சிறப்பு நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.

புதுதில்லியில் உள்ள மொரார்ஜி தேசாய் தேசிய யோகா கல்வி நிறுவனமும், மத்திய ஆயூஷ் அமைச்சகமும் இணைந்து நடத்திய இந்த சிறப்பு நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கானோர் யோகா பயிற்சியில் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

மனதிற்கும், உடல் நலத்திற்கும் யோகா பயிற்சி அவசியம் என்பதை வலியுறுத்தும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மனிதகுலத்தின் ஒற்றுமையை அனைவரும் சேர்ந்து வெளிப்படுத்துவதற்கு யோகா பயிற்சியை மேற்கொள்ள வேண்டுமென விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**[]<<<>>>[]**

தெலங்கானா மாநிலத்தில் சட்ட மேலவை இடைத்தேர்தல் தற்போது நடைபெற்று வருகிறது.

வாராங்கல், கம்மம், நல்கொண்டா பட்டதாரி தொகுதிகளுக்கு இன்று காலை எட்டு மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 4 மணிவரை நடைபெறுகிறது.

இந்த தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 5ஆம் தேதி எண்ணப்பட்டு, அன்றே முடிவுகள் அறிவிக்கப்படும்

***End of News***